ந.க.எண்.14090/2008/ஈ2

பேரூராட்சிகள் ஆணையரகம்,
குறளகம், சென்னை–108

நாள் 30 .07.2008

**அவசர சுற்றறிக்கை**

பொருள்– பேரூராட்சிகள் நிர்வாகம் – பேரூராட்சிகளில் செயல்படுத்தப்படும் நடைமுறைகள், பணிகள் மற்றும் பராமரிப்புப் பணிகள், பொருள்கள் கொள்முதல் செய்தல் ஆகியவைகள் குறித்து விரிவான அறிவுரைகள் வழங்குதல் சார்பாக.

பார்வை– 1) இவ்வாணையரக சுற்றறிக்கை எண்.1/2008/இ2/ நாள் 25.1.2008.

2) பேரூராட்சி செயல் அலுவலர்களுக்கான கையேடு புத்தகம்

பேரூராட்சிகளுக்குத் தேவையான தெருவிளக்குகள், குடிநீர் உதிரி பாகங்கள், பொது சுகாதாரப் பொருட்கள் மற்றும் எழுது பொருட்கள் ஆகியவற்றினை கொள்முதல் செய்வது குறித்து தேவையான விரிவான வழிகாட்டி நெறிமுறைகள் பார்வை 1ல் காணும் இவ்வாணையரக சுற்றறிக்கை மூலம் வழங்கப்பட்டுள்ளது. இருப்பினும் சில பேரூராட்சிகளில் ஒப்பந்தவிதிகள் மற்றும் நெறிமுறைகள் கடைபிடிக்காமல் கொள்முதல் செய்யப்படுவதாகவும், குடிநீர் மற்றும் தெருவிளக்கு பராமரிப்பு இனங்களில் மிக அதிகமான செலவினங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் எனது கவனத்திற்கு கொண்டு வரப்பட்டுள்ளது.

மேலும், சில பேரூராட்சிகளில் கீழ்க்கண்டவாறு தவறுகள் நடைபெறுவதும் எனது கவனத்திற்கு கொண்டு வரப்பட்டுள்ளன.

1) ஒப்பந்த விதிகளை அனுசரிக்காமல் விலைப்புள்ளிகள் மட்டும் பெற்று பொது சுகாதார உபயோகத்திற்குத் தேவையான பொருட்கள், தெருவிளக்கு உபயோகத்திற்குத் தேவையான இடுபொருட்கள் மற்றும் குடிநீர் பராமரிப்பிற்குத் தேவையான உதிரி பாகங்கள் ஆகியவற்றினை கொள்முதல் செய்யப்பட்டு வருகிறது.

2) பேரூராட்சிக்கு சொந்தமாக கொசு மருந்து அடிக்கும் இயந்திரம் இல்லாமலேயே அதற்காக டீசல் வாங்கப்பட்டுள்ளதாக தெரிய வருகிறது.

3) தெருவிளக்கு பராமரிப்புக்குத் தேவையான உபகரணங்களை சில நிறுவனங்களிடமிருந்து விலைப்பட்டியலை மட்டுமே பெற்று தேவைக்கும் மிக அதிகமாக பெறப்பட்டு பேரூராட்சி நிதிக்கு இழப்பு ஏற்படுத்தப்படுகிறது.

4) குடிநீர் திட்டத்திற்கான பணியாளர்களை பராமரிப்பு பணிக்கு பயன்படுத்தாமல் ஒப்பந்ததாரர்கள் மூலம் செயல்படுத்துவதாகத் தெரிய வருகிறது. இந்நிலை ஏற்கத்தக்கதல்ல. இதனால் பேரூராட்சிக்கு நிதியிழப்புகள் ஏற்படுகிறது.

5) பேரூராட்சியின் பொது நிதியிலிருந்து குடிநீர் திட்ட பராமரிப்பிற்கு அதிகமாக செலவிடப்படுகிறது.

6) சில பேரூராட்சிகளில் மன்றத் தீர்மானம், மதிப்பீடு ஒப்பந்தங்கள் கோருதல் இவற்றை முறையாக அனுசரிக்காமல் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

7) பணிகளை மேற்கொள்வதற்கான விதிமுறைகளை பின்பற்றாமலும், ஒப்பந்த்தப்புள்ளிகள் கோரப்படாமலும் பணிகளை எடுத்து செயல்படுத்துதல்

எனவே, கீழ் குறிப்பிட்டுள்ள அறிவுரைகளை கடைபிடித்து தேவையான ஆவணங்கள் மற்றும் தகவல்களை ஆணையர் ஆய்வுக்கு வரும் பொழுது தயார் நிலையில் வைத்திருக்க இதன் மூலம் அறிவுறுத்தப்படுகிறது.

- பேரூராட்சிகளில் கொள்முதல் செய்யப்படும் தெருவிளக்குகள், குடிநீர் உதிரி பாகங்கள், பொது சுகாதாரப் பொருட்கள், எழுது பொருட்கள், ஆகியவைகள் விதிகள் மற்றும் வழிகாட்டி நெறிமுறைகள் கடைபிடிக்கப்பட்டு பெறப்பட வேண்டும்.

- மேற்படி கொள்முதல் செய்யப்படும் ஒவ்வொரு இனத்திற்கும் தனித்தனியாக இருப்புப் பதிவேடுகள் முறையாகப் பராமரிக்கப்பட்டு நாளது தேதி வரை பதிவுகள் செய்திருத்தல் வேண்டும்.

- தேவையின் அடிப்படையில் மட்டுமே பொருட்கள் அவ்வப்போது கொள்முதல் செய்யப்பட்டு இருப்பில் வைக்கப்பட வேண்டும்.

- தெருவிளக்குகளுக்கு வழங்கப்படும் உதிரி பாகங்கள் அரசினால் நிர்ணயிக்கப்பட்ட அளவீட்டின் எண்ணிக்கையின் அடிப்படையில் மட்டுமே வழங்கப்பட்டிருக்க வேண்டும். அதற்கான மின் கம்பம் வாரியான பதிவேடு (Pole war Register) கண்டிப்பாகப் பராமரிக்கப்பட வேண்டும். மேற்படி பதிவேடு பராமரிக்கப்படாமல் விநியோகிக்கப்படும் பொருள்கள் முறையற்றதாகக் கருதப்படும்.

- 15 தினங்களுக்கு ஒரு முறை எரியாத தெருவிளக்குகள் குறித்த பட்டியல் தயாரிக்கப்பட்டு அதன் அடிப்படையில் மட்டுமே தேவையான உதிரி பாகங்கள் பெறப்பட்டு, அவ்வப்போது வழங்கப்பட வேண்டும்.

- பழுதடைந்த தெருவிளக்கு மறறும் குடிநீர் உபயோகத்திற்கான பொருட்கள் மாற்றப்படும் பொழுது பழுதடைந்த பொருட்கள் உபயோகத்திற்கு லாயக்கற்ற பொருட்கள் பதிவேட்டில் (Register of Unserviceable Articles) பதிவு செய்யப்பட்டு வைப்பறையில் சேர்க்கப்பட வேண்டும். அதற்கான பதிவுகள் சம்மந்தப்பட்ட பதிவேடுகளில் பதிவு செய்யப்பட வேண்டும்.

- மேலும், குடிநீர் பராமரிப்பின் கீழ் மேற்கொள்ளப்படும் குடிநீர் குழாய் உடைப்பினை பழுது பார்த்தல், மின் மோட்டார்கள் பழுது பார்த்தல் ஆகிய இனங்களுக்குத் தேவையான ஆவணங்கள்/ஆதாரங்கள் பராமரிக்கப்பட வேண்டும். அடிக்கடி பழுதல் நேரா வண்ணம் உரிய காரணத்தை ஆராய்ந்து இந்நிகழ்வு மீண்டும் ஏற்படாமல் அதனைத் தவிர்க்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.

- வழங்கப்படும் குடிநீரில் குளோரினேசன் செய்யத் தேவையான பிளீச்சிங் பவுடர் 1000 லிட்டருக்கு 4 கிராம் வீதம் அந்தந்த பேரூராட்சிகளுக்குத் தேவையினை 3 மாதங்களுக்கு தேவையான அளவு மட்டுமே கொள்முதல் செய்யப்பட்டு இருப்பு வைக்கப்பட வேண்டும்.

- மேலும், கொள்முதல் செய்தல், ஒப்பந்தப்புள்ளிகள் கோரி பணிகள் ஒப்படைத்தல் மற்றும் பராமரிப்புப் பணிகள் மேற்கொள்ளுதல் ஆகிய இனங்களில் உரிய விதிகள் பின்பற்றப்பட வேண்டும்.

- குடிநீர் திட்டப் பயன்பாட்டில் உள்ள மின்மோட்டார்களில் ஏற்படும் பழுது நீக்கம் செய்தல் மற்றும் மின்மோட்டார் மாற்றுதல் ஆகியவற்றிற்கான பதிவேடு பராமரிக்கப்பட வேண்டும். (History Register)

- பேரூராட்சி செயல் அலுவலர்களுக்கான கையேடு புத்தகம் அனைவருக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. மேற்படி கையேடு புத்தகத்தை முழுவதுமாக படித்தறிந்து அதில் குறிப்பிட்டுள்ள அனைத்து இனங்களின் மீது, நிறைவேற்ற தேவையான உரிய நடவடிக்கையினை 10 தினங்களுக்குள் மேற்கொள்ளப்பட வேண்டும்

மேற்படி அறிவுரைகள் தவறாது பின்பற்றப்பட வேண்டுமெனவும், அதில் ஏதேனும் முறைகேடுகள் / அலட்சியம் காணப்படின் கடுமையான ஒழுங்கு நடவடிக்கை எடுக்க நேரிடும் என்பதையும் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

மேலும், கீழ்காணும் சான்றுகளை இவ்வாணையரகத்திற்கு அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

1) எவ்வித பணிகளையும் ஒப்பந்தப்புள்ளி கோராமல் மேற்கொள்ளப்படவில்லை என்பதற்கான சான்றினை உதவி இயக்குநர் / மாவட்ட ஆட்சித் தலைவர் வழியாக இவ்வாணையரகத்திற்கு அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

2) செயல் அலுவலர்களுக்கான கையேடு புத்தகத்தில் வழங்கப்பட்டுள்ள அறிவுரைகளை முழுமையாக படித்தறியப்பட்டது என்பதற்கான சான்று.

3) தணிக்கை அறிக்கைகளில் அடிக்கடி எழுப்பப்பட்ட தணிக்கை குறிப்பினை படித்து தெரிந்து கொண்டேன் எனவும், மீள இத்தணிக்கைத் தடைகள் எழாவண்ணம் செயல்படுவேன் என்பதற்கான சான்று.

மேற்கூறிய அனைத்து அறிவுரைகளையும் பின்பற்றி மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் குறித்து அறிக்கையினை 10.8.2008க்குள் இவ்வாணையரகத்திற்கு உதவி இயக்குநர் / மாவட்ட ஆட்சித் தலைவர் மூலமாக இரு பக்கங்களுக்கு மிகாமல் அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

**ஒம்/– கே.கோபால்**
ஆணையர்

பெறுநர்

அனைத்து பேரூராட்சி செயல் அலுவலர்கள்

நகல்–

அனைத்து மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநர்கள்